கிருஷ்ணா பிக்சர்ஸ்

வனசுந்தரி

"...தி"

...ண கவி

...ப...ஸன்

ச...தம்	— C. R. சுப்பராம்
	S. V. வெங்கட்டராம்
நடன அமைப்பு	— வழுவூர் ராமையாபிள்ளை, ஹீராலால்
பின்னணி சங்கீதம்	— கானசரஸ்வதி. D.K. பட்டம்மாள்
	இசைக்குயில் P. A. பெரியநாயகி
படப்பிடிப்பு (நிர்வாகம்)	— ஜித்தன் பானர்ஜி
படப்பிடிப்பு	— V. குமாரதேவன்
உதவி	— பாபு
ஒ...ப்பதிவு (நிர்வாகம்)	— டின்ஷா K. தெஹ்ராணி
ஒலிப்பதிவு	— லோகநாதன்
உதவி	— கருணாகரன், பத்மநாபன்,
	கண்ணன், ஜெகம்
செட்டிங்ஸ் (நிர்வாகம்)	— F. நாகூர்.
செட்டிங்ஸ்	— செல்லம்-மேஸ்திரி, பாபு,
	கோபால், குப்புசாமி
லெபரட்டரி	— எதிராஜ்-நடேசன்
எடிட்டிங்	— S. A. முருகேஸ்
உதவி	— M. ராமகிருஷ்ணன்
	P. S. வின்பிரட், தேனப்பன்
மேக்கப்	— ஹரிபாதசந்திரபாபு, ராமசந்திரன்.
	தனக்கோடி, கிருஷ்ணன், கோபால்,
உடையலங்காரம்	— M. நடேசன் [மூத்து
உதவி	— கண்ணன், லிங்கம், கோவி...ஜ்
ஸ்டில் ஸ்டடீஸ்	— நாகராஜ ராவ்
புரொஜெக்ஷன்	— S. வேலாயுதம்
புரடக்ஷன் மானேஜ்மென்ட்	— கோபால் நாயர், ...த்...நயா,
	நாகராஜ், சந்தானம்,
	கோவிந்தராஜ், கோவிந்தன்,

சினேரியோ, டைரக்ஷன் - T. R. ரகுநாத்

கூட்டுறவு	— முருகேஸ், ராமகிருஷ்ணன்
ஸ்டுடியோ	- **நியூடோன்**

வன சுந்தரி

T-UN-547

கதைச் சுருக்கம்

நீலபுரி மன்னன், மார்த்தாண்டன், மக்கள் நலம் நாடாது, தனது வயது காலத்திலும் சிருங்கார கேளிக்கை களில் காலம் கழிப்பதை, அரசகுமாரன் குணசாகரன் வெறுக்கிறான். தந்தையின் தவறை எடுத்துச்சொல்கிறான். அதனால் பலனாக நாடு கடத்தப்படுகிறான். அவன் நண்பன் மேதாவியும் கூடவே, வெளிக் கிளம்புகிறான். ஊரூராகத் திரிந்து முடிவில் அமராவதிப் பட்டணத்தை வந்தடைகின் றனர் இருவரும்.

அங்கும் சூழ்ல்கள் நிரம்பிய அரசாங்கம். அண்ணனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய கபளீகரன் ஆட்சி செலுத்திவந்தான்... அவனது ஆசை நாயகி லீலாம்ருதமே அவ்வூர் மஹாராணி...சுயநலமே உருவான அஷ்ட வக்ரனே பிரதானி. இவர்கள் மூவரும், காலஞ்சென்ற கீர்த்தி வர்மன் மகளான வனசுந்தரியைக் கட்டுப்பாட்டுடன் கண் காணித்து வருகின்றனர். வனசுந்தரியோ தனது தந்தை யின் ஆவியால் உண்மை உரைக்கப்பட்டவளாக, இவர் களைப் பழிவாங்கக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

பசிக்குஏதாவது கிடைக்குமா என்று அலைந்த மேதாவி திருட்டுக் குற்றம் சாட்டப்பெற்று அரண்மனைச் சிறையில் அடைபடுகிறான். அவனைத் துரத்திச்சென்ற காவலாளர்கள் குணசாகரனையும் பின் தொடர, அவனோ காட்டில் முகாம் போட்டிருந்த வனசுந்தரியைச் சந்திக்கிறான்... இருவரும் அவரவர் சோகக் கதைகளைச் சொல்கின்றனர். மீண்டும் வனசுந்தரியின் அந்தப்புரத்தில் அவளைச் சந்தித்து, அவளுக்கு உதவி புரிய வாக்களிக்கிறான் குணசாகரன். அச்சமயம் கபளீகரன் ஆட்களால் கைது செய்யப்பட்டு மேதாவியுடன் சிறையிலடைபடுகிறான......!

காமவெறி கொண்ட லீலா, சிறையில் குணசாகரனைக் கண்டு தன் மோக வலையை வீசுகிருள்...அவனே அதை அலட்சியம் செய்கிருன.

வனசுந்தரியின் பணிப்பெண் சந்திரிகா செய்யும் சாகசத்தின் பயனுய் இருவரும் சிறையிலிருந்து தப்பி ஓடுகின்றனர்.

ஓடியவர்கள் மந்திரவாதி ஜக்கம்மாவைச் சந்தித்து அவள் உதவியால்மோஹினிப்பதுமையைஎடுக்கின்றனர். மோஹினியின் உதவியால் அரசகுமாரர்கள் போல் நடித்து மீண்டும் அமராவதியை வந்தடைகின்றனர். அப்போது அவர்களுக்கு வரவேற்பு, அரசாங்க மரியாதை, விருந்தும் வேடிக்கைகளும் நடைபெறுகின்றன.

கபளீகரனையும் அவன் சகாக்களையும் ஒழிக்க சமயம் தேடிக்கொண்டிருக்கும் அவர்களுக்குமீண்டும சிறைவாசம் நேரிடுகிறது...மேதாவி இம்முறையும் தப்பி ஓடிவிடுகிருன்.

மோஹினிப்பதுமை பல கைகள் மாறி முடிவில் மேதாவியின் கையில் கிடைக்கிறது. இதனிடையே வனசுந்தரியைப்பங்கப்படுத்த எண்ணுகிருன கபளீகரன்...சமயத்தில் அங்கு வரும் குணசாகரன இதைத் தடுக்கிருன; உண்மையை அரச சபையில் வெளிப்படுத்துகிருன...தீயவர் அழிவதும், நல்லோர் இன்புறுவதும் நண்பர்கள நாடு சேருவதும் வெள்ளித் திரையில் காண்க.

சுபம்.

பாட்டுகள்

1. நடனம் : லலிதா-பத்மினி

இயற்றியவர் : உடுமலை நாராயணக்கவி

பாடியவர் : D. K. பட்டம்மாள்

நாடு செழித்திடவும் உள்ளமே நாடு
நல்ல மழை பெய்யவும் நலமே தேடு
காடு கழனி எங்கும் கதிர்வளம் சூழ
மாடு மனை தேடும் மக்கள் மனம்போல் வாழ (நா)

நீதி தவருமலே அன்பாலே
நேசமும் குறையாமல் நாளே
ஜாதி மத பேதம் இல்லாமலே
தனனலம் எண்ணுமலே மேலாம் (நாடு)

ஆணும் பெண்ணும் சமரசம் தான்—பெறும்
ஆருயிர் உடல் போலவே எந்நாளும்
காணரும காதல் கலையுணர்வோடு
காட்சியுடன் செல்வம் கருணை நீடும் (நாடு)

2. இசை நடனம் : லலிதா-பத்மினி-கோரஸ்

இயற்றியவர் : கம்பதாஸன்

பாடியவர்கள் : P. A. பெரியநாயகி, K. V. ஜானகி மற்றும் பலர்

இன்பமாகப் பாடுவோம் எங்கள் ராணி வாழவே
இந்த நாளே ஈடில்லாத ஆனந்தந்தான்...!
பாரில் பெண்கள் மேன்மை பேசும்
சீரார் கிளியே
வளர் பிறையைப் போலே வாழ்கவே
எந்நாளும் புகழாய் (இன்ப)

கலைஞானியர் போற்றும் எங்கள் கண்ணின் மணியே
குலக்கொடியே ராஜ தவச் செல்வமே (இன்ப)

அன்னம்போல ஆடிச் செல்லும் ஓடமே
ஜலஸா—ஆமாஹோ—ஜலஸா
அலை பொங்கிடுதே பாலைப்போல் காற்றிலே
ஜலஸா—ஆமாஹோ—ஜலஸா
வான மென ஜோதிவீசும் மானவிழி வனராணி
ஜலஸா—ஆமாஹோ—ஜலஸா
மதிமுகமணியே மனமே மகிழ்வாகிட விரைவோமே
ஜலஸா—ஆமாஹோ—ஜலஸா (இனப்)

3. பாட்டு : லீலாம்ருதம்

இயற்றியவர் :
உடுமலை நாராயணக்கவி

பாடியவர் :
S. வரலக்ஷ்மி

நானே மஹாராணி—மஹாராணி—இந்த
நாடாளும் யுவராஜ மோஹினி
வனசுந்தரி இனிமேலே மானினி என் சேடி
மதனும் ரதிபோல நாமே ஆனோம் ஜோடி (நானே)

நாலாவகையிலும் லீலாம்ருதம்—இந்த
நாட்டின எஜமானி—சீ
மாட்டியும் அபிமானி
நலமாக உல்லாச பவனி—வரும் ஸ்ரீ ராணி
கோலாகலமாய் வாழ்வேனே—எனைக்
குலவி மகிழும் கோமானே (நானே)

என்னைக் கண்டு யாராகிலும்
எதிர் நின்று பேசுவாரோ
பொன்னைத் தந்து—புஷ்பங் கொண்டு
புகழ் சொல்லிப் பணிவாரே
மன்னவனும நீரே மதி மந்திரியும் நானே
மணமாகுட—ஸ்நேகம் வளர்தரு மிது நாளே (நானே)

4. இசை நாடகம் : லலிதா-பத்மினி-ஜெயலக்ஷ்மி

இயற்றியவர் :
உடுமலை நாராயணக்கவி

பாடியவர்கள் ;
P. A. பெரியநாயகி K. V. ஜானகி
P. லீலா.

டியோ டியோ டியோ டியாளோ
டியோ டியோ.........யே

ஐயே அம்மே ஆயாளோ—
கைலாயங் குடகுமலே பொதியமாபலே—எங்க—வட
கந்தசாமி கோயில் கொண்ட கழுகுமாமலே எங்கமலே (டி)

கலங்கொம்பு ஏலம் மலேபாம்பு தோலு
கஸ்தூரி யிருக்குது யே அம்மே...!
புலித்தோலிருக்கு நகமிருக்கு
பல்லிருக்குது ஏ ஆயி...!
காடாபெறந்த காணங்கோழி
காட்டு மயில் பீலி
காசில்லாம ஓசி கேட்டா
கடுக்கா கொடுப்பேன் வாங்க (டியோ)

பொய்யே இல்லாமே கடந்து
போனதுஞ் சொல்வேன்—குறி
மெய்யாகத் தானே மேலே
நடப்பதுஞ் சொல்வேன்—உங்க
பையே அவுத்து பணத்தை வெத்தலே
பாக்குமேலே வச்சுபுட்டு—ஒ
அய்யாமார்களே எங்கிட்ட கையெக்
காட்டுங்க பாப்போம் (டியோ)

ஒரு குலுக்கு—ஒரு பிலுக்கு
ஒரு அலுக்கு—ஆஹா
சிங்காரிச்ச பொம்மை போலே
சித்திரம் போலே இருக்கிறு
இங்கே நிக்கும் இவளெப்பாத்தா
ஏதோ எனக்கொரு மாதிரியாகுது
எங்கே வந்தீங்க தாத்தா
என்னத்தெப் பாக்குறீங்க

அன்னப் பெடையே சொர்ணக் கொடியே
அஞ்சுகமே செந்தேனே—உன்
ஆடல் பாடல் எல்லாங் கண்டு
ஆசையுங் கொண்டேனே—நீ
தன்னந்தனியே தானே—இறக்க
தகுமோ சொல்லடி மானே—இந்த
தா[illegible] [illegible]கயால் தாலி போட்டுக்கோ
[illegible]குந்த ஜோடி நானே

காடு வாவாங்குது—இந்தக்
காலத்திலே வாலிபக் கொண்டாட்டமா கிழவா--!
சாகப்போற கிழவனுக்கு பெண்டாட்டியா
சும்மா டம்மா கும்மா கொட்டு முளக்கு
கொண்டாட்டமா?

கன்னு பின்னுன்னு பேசிக்கிட்டு
கண்ணைக் கிண்ணே சிமிட்றயே
நல்லாருக்கா—என்னே என்னுன்னு நினேச்சிக்கிட்டே
வீடு போ போங்குது—இந்த
வேளையிலே வாலிபக் கொண்டாட்டமா...?

கிழவன் கிழவன் என்றே சொல்லி
கிறுக்குத் தனமா உளராதே
இளமையான காய் பழுத்த பழம் போல்
இனிக்குமென்று எண்ணுதே
எனே நீ வெறுத்துத் தள்ளாதே
இதுவே சமயம் தவற விடாதே.
தாத்தா மொகத்தைப் பாத்துப் பேசு
ஆத்தாடி நீயே

இப்போதென் ஆசை தீர்ப்பாயே...!
ஐயோ! இந்தக் கிழவனோடே நான் என்ன
பண்ணுவேன!?"...சனியன்...! தாத்தா!
நீ போக மாட்டே?

நான் செத்தாலும் உம்மேலே விழுந்து
சாவேனே தவிற உன்னே விடுப்
போகவே மாட்டேன்...

எலே மாமா...! எம்புள்ளே ஐயோ வாயேன்...!
இதோ வந்துட்டேன்...ஏன்?
இதெப் பாரு...!...இவன் யாரு...!
எந்த ஊரு...!...என்ன பேரு...?
எங்கே வந்தான்!

நான் பாடிக்கிட்டே ஆடிக் கிட்டே
உன்னே தேடிக்கிட்டே வந்தேன்
இவன் பாத்துக் கிட்டே கேட்டுக்கிட்டே
என் பக்கத்திலே வந்தான்...வந்து?

அன்ன மின்னுஞ் சொர்ணமின்னுன்
அஞ்சுசங் கிஞ்சுகம் அப்படின்னுன்—என்
அழகெப் பாத்து ஆளெப்பாத்து
சண்ணடிக்கிருன் கட்டெல வைக்க...!
ஆஹ்ஹா...! டேய்...! உம் அப்புறம் என்ன
செஞ்சான்

உன்னெப்போல எண்ணிச்கிட்டு
உபத்ரவம் பண்ண வந்தான்
ஊஹூ நான் மாட்டேன்னேன
எட்டிப் புடிச்சுக்கிட்டான சாலெ
இன்னுங் கொஞ்சம விட்டிருந்தா
கட்டிப் புடிச்சுக்குவான—தாலி
கட்டியும் விட்டிருப்பான்...!

ஆஹ்ஹா...அடி செவிட்லே அயோக்கிய பயலே
...ஐயோ...அம்மா...அப்பா...
எங்கடா வந்தே...? ஐயையோ...!
போதும் விடுங்க...! போடா...!
உன்னலே இன்னிக் கவன் பொழைச்சான்!
இதுக்குத்தான் நீங்க என்னெ விட்டுப்
பிரியாமே எப்பவும் கூடவே இருக்கணுமனு
நான் சொல்றது...!

ஏண்டி!

பொமபளையைப் பாத்துக் கிட்டு
புள்ளெயுங் குட்டியும் பெத்துக் கிட்டு
பொளப்பை தளப்பை விட்டுப் புட்டு
புருசன் வேலெக்குப் போகாமே—வீட்டிலிருந்தா
பூவாவுக்கு எங்கே போறது?
சொல்லடி தங்கம்

கண்ணலே பாத்துக்கிட்டு
கதையுங் கிதையும் பேசிக்கிட்டு
காதல் பாட்டும் பாடிக்கிட்டு
கண்ணளா நாம் ஒண்ணு யிருந்துட்டா—வவுறுங்கூட
கஞ்சியும் தண்ணியும் கேக்காதுங்க—!
ஏங் கட்டழகா

டீயோ டீயோ டீயோ டீயாளோ—ஏ
ஐயே—அம்மே—ஆயாளோ.

5, பாட்டு : குலாசாகரன்

இயற்றியவர் :
கம்பதாஸன்

பாடியவர் :
P. U. சின்னப்பா

எண்ணும் எழுத்தும் இரு கண்ணாகும்
ஏழைகள் வாழ்ந்திட இது தெய்வமாகும்
உண்மையை உணர இது துணை செய்யுமே
உலகம் சமரச அன்பு கொண்டாடுமே
தாழ்ந்தவரும் புகழ் பெறலாம் இதாலே
சாஸ்வதமாம் செல்வந்தான் மென்மேலே
சார்ந்திடுமே சன் மார்க்கம் தன்னாலே
தமிழரசி ஔவை சொல்லைப் போலே
வறுமையின்றி மக்கள் உரிமையாக—வாழவே
வஞ்சகமேவும் சுயநல மனிதன் ஒழியவே
வானவர்போல் என்றும் இன்பம நாம் காணவே
வள்ளுவனார் நல்லுரை தனைப் போலவே (எ)

6. பாட்டு : சந்திரிகா.

இயற்றியவர் :
உடுமலை நாராயணக்கவி

பாடியவர் :
T. A. மதுரம்

ஆடு பதினெஞ்சு புலி மூணு—இந்த
ஆட்டம் ஆட இங்கே அது வேணும்!
எது...? மூளையது வேணும்!.
ஆடும போது கூட ரெண்டு ஆளுமிருக்கோணும்
அவங்க சொல்லை கவனிக்க வேணும—யேய்...!
அட அவனெதுக்கு...? ரஸிகக வேண்டாம்...!
அங்குமிங்கும் பார்த்திடாமல்—எங்கூட
இனமே நீ ஆடோணும்...! (ஆடு).

அடைப்பட்ட புலிகள் தடையற்று வெளியில்
விடுபட்டு வரவேணும்—அதுக்குத்தான்

அறிவை செலுத்த வேணும்...
செலுத்தினு...? அதுக்கொரு வழி தோணும்...!
எப்படி...? அதெவெட்டு...!
வெட்டட்டா...? ஊம்...! இதெவெட்டு...!
இடைவெட்டு மலேவெட்டு
இருவெட்டு கொடுத்தா
எதிரி முழிக்க வேணும்—புலிகளும்
இடம விட்டு மாற வேணும்...
ஆடு பதிமூணு புலி மூனு—இந்த
ஆட்டம ஆட இங்கே அது வேணும்.

கரடி...? ஊம்...!

எப்படி ஆட்டம்...? எனக்கு அதிலயா நோட்டம்!
காலு வெட்டு எப்படி? அட நீ ஒண்ணு...!
நான் காலு வெட்டைப் பாககறதா...
கண்ணு வெட்டப் பாக்கறதா?
அட ஆட்டத்தைப் பாரு...!

எனக்கு ஆட்டம் கீட்டம் ஒண்ணும் வேண்டாம்
நீ பாட்டைப் பாடு...பாத்துககிட்டே இருக்கேன்

கோட்டை மதில் மீதிலேறி குதிச்சுடுங்க
அங்கே நிக்கும்
குதிரைகள் மேலேறி குந்திக்குங்க
காட்டு முசலேப் போலே காத்தாக பறந்திடுங்க
ஒட்டமும் நடையுமாய் ஊரை விட்டு தாண்டுங்க
மூட்டைக்குளளே பலகாரம்
முட்டாயிருக்கு பாருங்க
முடிச்சுப் போட்டு வெச்சிருக்கும்
முதலெ எடுத்துக் கொளளுங்க
பாட்டாலே சொன்னதைச் செய்யுங்க
பயப்படாதிங்க—சீ

மாட்டி வண்ணத் தழகி தன்னே
மறந்திடாதிங்க—நீங்க
மறந்திடாதிங்க...!

7. பாட்டு : வனசுந்தரி

இயற்றியவர் : கம்பதாஸன்

பாடியவர் : T. R. ராஜகுமாரி

மன்னர் பெண்ணாக நானும் மண்மீது தானே
வீணாக வளர்ந்ததும் ஏனோ
பொன் கூண்டில் கிளிபோல்
துன்பம் கொண்டேனே
என் வாழ்வின் கதி இதுதானோ (மன்னர்)

பெற்ற தாய் முகமே கனவிலும் காணாத
பெரும் பாவி ஆனேன் (பெண்ணாக)

பாசமாய் வளர்த்த தந்தையும்
சிறுதந்தை சூழ்ச்சியாலே
படுகொலை யாகினாரே (பெண்ணாக)

பறவையாய் பிறந்தாலும்
மனம் போல வாழலாமே
சிறகிலாப் பட்சி நான்
ஒரு சுகமும் கண்டிலேனே (பெண்ணாக)

8 பாட்டு குணசாகரன்-வனசுந்தரி

இயற்றியவர் : கம்பதாஸன்

பாடியவர்கள் : P. U. சின்னப்பா, T. R. ராஜகுமாரி

கண்ணிலே விளையாடும் இன்பக்
காதல் கனவே வா!

எண்ணும் நினைவில் துள்ளி ஆடும்
வண்ணக் கலாபமே வா!

ஏழை கண்ட செல்வம் நீயே
யாழில் மீட்டும் கானம் போல
வா...வாச மல்லிகை போல் மனமே மகிழ
வீசும் தென்றல் போலே நீ வா...

நேசம் மாறிடாதே ஆசைக் காதலாலே
நீல வானிலே உலாவும் மாமதி போலே!

உள்ளம் பொங்கும் வெள்ளம் நானே
ஓடம் போல மிதந்து வா!

கள்ளமே யில்லாத ஆருயிர் போல
காதல் கீதம் நீ பாட வா
கடலின் அலை போல ஆட வா

பாட்டாளி மக்கள் வாழ
பரிந்து பேசும் அறிவே வா!

பாரினில் நாமே பேதமில்லாமலே
சூரியன் தாமரை போலே

கண்ணோடு கண்ணே கலந்தே இன்பம் பெறுவோமே
காதல் வாழ்வே பெறுவோமே

9. பாட்டு : லீலாம்ருதம்

இயற்றியவர் : பாடியவர் :
கம்பதாஸன் S. வரலக்ஷ்மி

ஆடையலங்காரம் வேணும்
அழகான தாடி ராஜா...!
அழகான தாடி ராஜா
அரை மீசைக்காரா ஜோராய் (ஆடை)

வயதான கிழவனும் வாலிபன் போல
வடிவுடன் தோன்றவே கண்முன்னாலே
வையகம் மதித்திட மென்மேலே (ஆடை)

ஆடம்பரம் பாதி ஆள் பாதியே—இது
அனைவருக்கும் தெரிந்த சேதியே
ஆள் தெரியாதவரும் தெரிந்தவர் போல்வந்து
ஐயா! வாரும் உட்காரும் என்றழைக்க
எந்நாளும் (ஆடை)

10. பாட்டு : அதிமேதாவி-சந்திரிகா

இயற்றியவர் : பாடியவர் :

உடுமலை நாராயணக்கவி N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்

சொந்தமாக நெனைச்சு நானுந் தொட்டு பார்த்தேன்
சொந்தமாக நெனைச்சு நானுந் தொட்டு பார்த்தேன்
நீ தொட்டதாலே மதிப்பு மானம் கெட்டுப் போச்சு...
என்ன!...? —கறபு
கெட்டுப் போன பெண்ணை யாரு கட்டு வாங்க?

ஏம்மா! உன்னை...அண்ணந் தம்பி தொடலையா?
அப்பா தொட்லையா? ஒங்க அமமா கூடப் பொறந்த
மாமன் தொடாமெத்தா வளந்தையா?
ஆம்பிளை தொட்டா பொமபளை கெட்டுப்
போகுமா!—இது
அனுபவத்துக்குப் பொருத்த மான தாகுமா?
அணணந் தம்பி அப்பாவுக்கும்
அடுத்த வங்க தொடுவதற்கும்
எண்ணத்திலே பேத முணடு—புரிஞ்சுதா
இனி இப்படி யெல்லாம செய்யப படாது தெரிஞ்சுதா

தெரிஞ்சுதூ...

கரடியிங்கிற காவல் காரங்
கையை தொட்டதுங் தெரிஞ்சுது
சிறையில் திருடன தொட்டதுஞ்
சிரமப் பட்டதுங் தெரிஞ்சுது

அடியாத்தீ......இதெல்லாம் ஒனக்கு எப்படித்
தெரிஞ்சுது?

இது மட்டுமா!...நீ...சதையாகப் பாட்டுப் பாடி
உதவி செஞ்சுதுந் தெரிஞ்சுது. (சோகமாக).

11. பாட்டு : பூக்காரி ஜக்கம்மா

இயற்றியவர் : உடுமலை நாராயணக்கவி

பாடியவர் : P. A. பெரியநாயகி.

பூ... பூவோ பூவு...!

பூவோ பூவு...மணம் வீசும் புதிசான பூவு...!
பொம்பளை தலையில் வச்சா
புருசன் வாடை பிடிக்கும்பூ (பூவோ)

தேவாலயம் தேரோட்டம்
திருநாளில் விக்கிறபூ

செவந்தி செண்பகப்பூ
ஜாதிப்பூ மகிழம்பூ
செந்தாளம்பூ மனோரஞ்சித (பூவோ)

கல்யாண மாப்பிள்ளை பொண்ணும்
கையிலே பிடிக்கும் செண்டு
கச்சேரி பஜனைக் கெல்லாம்
கதம்ப மாலை உண்டு
கட்டிவெச்ச மல்லிகை முல்லை மொட்டு—யேங்
கைமுள நீளம் ஒண்ணரைத் துட்டு!

வாப்பூ...!

கூத்துப்பாக்கும் பொம்பளை வக்கிற
குண்டு மல்லிகைப்பூ—கடல்
பாத்து வாங்கும் பொம்பளை வக்கிற
கனகாம்பரப் பூ,
ஏம்ப்பூ—வாங்கலையா...?
வயசுப பொண்டுகளெல்லாம்
கண்டு மயங்கர பூ...பூ...பூப்பூ...!

மாடிமேலே இருக்கும் பெண்கள்
தலையிலே வச்சா—கீழே
வாசமடிக்கும் மந்தாரப்பூ வேணுமா
பூவு வேணுமா (பூவோ)

கடைவீதியில் விக்கிறபூ காயிதப்பூ—அது
கண்ணுக்கழகு வாசனையில்லா டேப்பு—இது
கொடிப்பூ வளர் செடிப்பூ—தினம்
கொண்டையி லிருந்தா மதிப்பு
கோமான் மகள் வாங்கறது—மரு
மரிக்கொழுந்து மலர்ந்த ரோஜா (பூவோ)

ஆசைக்கேத்த அழகுப்பூ
அம்மாத்தா வாங்கும்பூ
வாசம் மிகுந்தபூ மனதைமாத்தும்பூ
மயக்கம் கொடுக்கும் மதனகாம (பூவோ)

12. நடனம்: மோஹினி ஜிப்ஸி பெண்கள்

இயற்றியவர்: பாடியவர்:
கம்புதாஸன் P. A. பெரிய நாயகி P. லீலா மற்றும்பலர்

லலீலலல்லோ—லல்ல—லலீலலல்லோ

விண்ணின் இன்பம் நாடிட வாரீர் விநோதம் பாரீர்
விலாஸ கண்கள்—ஸலாப மின்னல் (லலீல)

தித்திக்கும் தேனின் ரோஜா வாயிதழே
தத்தைகள் தாவும் கொங்கை மாங்கனியே
ஜிஸ்கி தில்கி பஸ்மாஹி கும்கி ஜிகு ஜிகுபும்
புள்ளி மானைப் போலே துள்ளும் ஆடல் பார் (லலீல)

கதை ஒன்று சொல்லுவேன்—காதல்
கதை ஒன்று சொல்லுவேன்,
கனிவாக இவம் பெணமணி நானே— (கதை)

மதிமாலையிலே குளிர் சோலையிலே
மாமயிலே ஒயிலாய் ஆடவே
பூங்குயில் கீதம் பாடவே (கதை)

கட்டுத் தலைப்பாகை கட்டியே
கருமீசை தாடி ஒட்டியே
கனியாம் சுபத்திரையை
கைப்பிடித்தான அர்ஜுனனே
பூங்குயில கீதம் பாடவே (கதை)

தாவும் வண்டுதனை தடுத்தே துஷ்யந்தன்
சகுந்தலையை தழுவிச் சென்றானே
பூங்குயில் கீதம் பாடவே (கதை)

மதுரமான ஒருமாது தயிர்குடம்
ஏந்திப் போகும் போது
மாயக் கிருஷ்ணனும் சரஸம் புரிந்தானே
பூங்குயில் கீதம் பாடவே (கதை)

இன்னும்
கேட்டறியா காதல் கதை கேளும் கேளுமே
இந்த
நாட்டில் மெய்யாக இது விந்தையாகும் தானே
கள்வனே அஞ்சி வந்தானே அஞ்சி வந்தானே
கன்னத்தில் கன்னியால் ஒரு அறை பட்டானே
உள்ளம் பறிகொடுத்தாளே ஒரு ராஜகுமாரி
ஒருயிர்காதல் வாழ்வில் இன்பம்கொண்டாரே(லலீல)

13. பாட்டு : குண சாகரன்-வனசுந்தரி

இயற்றியவர் : பாடியவர் :
உடுமலை நாராயணக்கவி P. U. சின்னப்பா T. R. ராஜகுமாரி

நமஸ்தே......! நமஸ்தே !!
நல்ல நாளிதே நமோ நமஸ்தே நமஸ்தே!

காணாத காதல் நேரின்பம் கொஞ்சும்
சுப நாளிதே நமோ நமஸ்தே நமஸ்தே !
வரவேணும் நேசர் உமதோர் வருகையால்
மனமே மகிழ்வாய் இனிதே ஆனதே...!

ஆம் கலாவதி முகமே கண்டேன் கண்டேன்
சுப நாளிதே நமோ நமஸ்தே நமஸ்தே...!

மாலை நேரம் மனோகரந்தான் !
மாருத மென்பலர் வசிகரந்தான் !
மனமே தானென்றே யாகும் யோகம் (சுப)

ஆசையாலே ஆனசொந்தம்
ஆணும் பெண்ணாலே...!
நேசமாக நீடும் என்றும்
நினைவு மாறாதே...!

சுக வாழ்வு தேடவே பிறந்தோம்—வளர்ந்தோம்
காணாத காதல் நேரின்பம் கொஞ்சும்
சுப நாளிதே நமோ நமஸ்தே நமஸ்தே!

14. நடனம்: லலிதா-பத்மினி-கோரஸ்

இயற்றியவர்: பாடியவர்:
கம்பதாஸன் P. A. பெரியநாயகி K. V. ஜானகி மற்றும்பலர்

அன்னம்போல ஆடிச் செல்லும் ஓடமே
ஐலஸா—ஆமாஹோ—ஐலஸா
அலை பொங்கிடுதே பாலைப்போல காற்றிலே
ஐலஸா—ஆமாஹோ—ஐலஸா
காலநதிமீது செலலும் வாழ்வெனும் புதுவோடம்
ஐலஸா—ஆமாஹோ—ஐலஸா
சதிபதி யெனவே கலந்தோம்
பெரும காதலின் கரைசேர்வோம்

ஐலஸா—ஆமாஹோ—ஐலஸா
அன்னம்போல ஆடிச் செல்லும் ஓடமே
ஐலஸா—ஆமாஹோ—ஐலஸா
இன்பமாகப் பாடுவோம்
அன்பின் காதல் வாழவே
இந்த நாளே ஈடில்லாத ஆனந்தந்தான்

சுபம். சுபம். சுபம்.

தேவி பிரஸ் லிமிடெட் சென்னை—2.

நடிக...

P. U. சின்னப்பா	...	குலசாகரன்
T. S. பாலையா	...	கபலீகரன்
N. S. கிருஷ்ணன்	...	மேதாவி
R. பாலசுப்ரமணியம்	...	அஷ்டவக்ரன்
M. G. சக்ரபாணி	...	கீர்த்தி வர்மன்
D. பாலசுப்ரமணியம்	...	பிரபாகர்
C. V. V. பந்துலு	...	மார்த்தாண்டன்
M. S. கருப்பையா	...	மங்களன்
T. V. ராதாகிருஷ்ணன்	...	கப்சிப்
புளிமூட்டை ராமசாமி	...	ராஜாராம் பண்டிதர்
குளத்துமணி	...	வங்க முனி
V. K. ராமசாமி C. S. பாண்டியன்	...	(கரடி, தண்ட பிண்டம்)

R. K. ராமசாமி, N. திருவேங்கடம், T. S. மாணிக்கம்
முத்து பிள்ளை, ஸ்டண்ட் சோமு & பார்ட்டி
மற்றும் பலர்

நடிகையர் :

T. R. ராஜகுமாரி	...	வனசுந்தரி
S. வரலக்ஷ்மி	...	லீலாம்ருதம்
T. A. மதுரம்	...	சந்திரிகா
T. V. குமுதினி	...	ரூபவதி (மார்த்தாண்டன் மனைவி)
C. T. ராஜகாந்தம்	...	ஜக்கம்மா
S. லலிதா	...	பூக்காரி
C. R. ராஜகுமாரி	...	மோஹினி

P. பத்மா, A. ரத்னமாலா, K. ரீட்டாபாய், R. சரஸ்வதி
M. சரோஜினி, அபயம், பேபி சரோஜா

நடனம் :

லலிதா—பத்மினி

T. A. ஜெயலக்ஷ்மி C. R. ராஜகுமாரி

னசுந்தரி
தயாரிப்
கிருஷ்ண பிக்